# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC No.193/2024 | Date: 12.02.2026 |
| Deposition of Witness for | : | **அ.சா.2** | |
| Name | : | **ஆனந்தி** | |

(எதிரி ஆஜர்).

**குறுக்கு விசாரணை** :-

1) அ.சா.1 எனது கணவர் என்றால் சரிதான். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். எனது கணவர் என்னை சாட்சியம் அளிக்க அழைத்ததன் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் கோழிகால்நத்தம், திருச்செங்கோட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது கணவர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் லாரி பாடி பில்டிங் வேலை செய்து வருகிறார்.

2) எனது கணவர் ஆரம்ப காலத்தில் SRL பாடி பில்டிங்கில் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். அதனால், எனது கணவருக்கு நிலையான வருமானம் இல்லை என்றால் சரிதான், ஒருமாதம் வேலை இருக்கும், ஒருமாதம் வேலை இல்லாமலும் இருக்கும். எதிரியை, எனது கணவர் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல, எனது கணவரை பார்க்க அடிக்கடி வீட்டிற்கு வருவார்.

3) எதிரியிடம் எனது கணவர் மாத ஏலச்சீட்டு போட்டு வந்த விஷயத்தை எனது கணவர் என்னிடம் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனது கணவர்,

எதிரியிடம் போட்ட சீட்டை பாதியில் நிறுத்திவிட்டார் என்றால் எவ்வளவு தவணைகள் செலுத்தினார் என்று எனக்கு தெரியாது, எதிரி எனது கணவருக்கு சீட்டு தொகை மொத்தம் இரண்டு சீட்டிற்கும் சேர்த்து ரூ.1,60,000/-ம் கொடுக்க வேண்டும் என்று மட்டும் தெரியும். சீட்டு தொகை நிலுவைக்காக எனது கணவர், எதிரியிடம் பிணைய காசோலை பெற்றுக்கொண்டாரா என்றால் இல்லை.

4) சீட்டு நிலுவைத்தொகைக்காக எனது கணவர், எதிரியிடம் சென்று பணம் கேட்டுகொண்டே இருந்ததால், எதிரி அவரிடம் பணம் இல்லாததால் பாதுகாப்பிற்காக இந்த வழக்கு காசோலையை எனது கணவரிடம் வழங்கினார் என்றால் சரியல்ல. எனது கணவரிடம், எதிரி பெற்றுக்கொண்ட ரூ.5,00,000/- பணத்திற்காக தான் காசோலை கொடுத்தார். எதிரிக்கு, எனது கணவர் இந்த வழக்கு கடன் தொகையை கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு எவ்வளவு நாட்களுக்கு முன்னர் சீட்டு நிலுவை தொகையை எதிரி கொடுக்க வேண்டும் என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தெரிந்துகொண்டே வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) சீட்டு பணத்தை கேட்பதற்காக நானும், எனது கணவரும் எதிரியின் வீட்டிற்கு சென்றுள்ளோமா என்றால் நான் சீட்டு தொகை கேட்பதற்காக சென்றதில்லை, இந்த வழக்கு கடன் தொகையை கேட்பதற்காக தான் சென்றுள்ளேன். எதிரி மற்றொருவர்களுக்கு சீட்டு நிலுவை தொகையை கொடுக்க வேண்டும் என்ற காரணத்திற்காக தான் எங்களிடம் கடன் கேட்டாரா என்றால் இல்லை, இடம் கிரையம் வாங்க வேண்டும் என்றும், கிரையம் முடிந்தவுடன் சீட்டு தொகையுடன் சேர்த்து பணத்தை திருப்பி கொடுப்பதாக கூறி கடன் பெற்றார்.

6) எதிரிக்கு கொடுத்த பணம் எவ்வாறு எங்களுக்கு வந்தது என்றால் எனது சம்பள பணம், எனது கணவரின் சம்பள பணம் மற்றும் எனது நகைகளை அடகு வைத்து கிடைத்த பணம் ஆகியவற்றை சேர்த்து எதிரிக்கு கடன் கொடுத்தோம். என்னென்ன நகைகளை, எந்த வங்கியில் வைத்து கடன் பெற்றேன் என்றால் கூட்டுறவு வங்கியில், சையின், கம்மல், மோதிரம், மாட்டல், ஆரம் ஆகியவற்றை வைத்து கடன் பெற்றேன். எதிரி சீட்டு தொகையுடன் சேர்த்து தருவதாக கூறியதால் தான் நகையை வைத்து கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். எந்த தேதியில் நகையை அடகு வைத்து கொடுத்தேன் என்றால் கடந்த 02-10-2023ம் தேதி காலையில் கடன் கேட்டார், மதியம் சுமார் 12.00 மணிக்கு மேல் அடகு வைத்து கடன் கொடுத்தேன்.

7) நகையை அடகு வைத்த ரசீதை நான் வீட்டில் வைத்துள்ளேனா என்றால் ஆமாம். அதனை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் உண்மையிலேயே, நகையை அடகு வைத்திருந்தால், ரசீதை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பேன் என்றும், அவ்வாறு அடகு வைக்காததால் தான் ரசீதை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. எந்த கூட்டுறவு வங்கியில் நகையை அடகு வைத்தேன் என்றால் கோழிக்கால்நத்தம் கூட்டுறவு சொசைட்டியில் அடகு வைத்தேன். எதிரிக்கு கடன் கொடுத்தபோது யார் யார் இருந்தோம் என்றால் நானும், எனது அத்தையும் கொடுத்தோம், உடன் எனது கணவர் இருந்தார். எதிரியுடன் வேறு யாரும் வரவில்லை என்றால் சரிதான்.

8) எதிரி பணம் கேட்டபோது தான் முதன்முறையாக நகையை அடமானம் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல, அதற்கு முன்னரும் அடிக்கடி வைத்துள்ளேன்.

புகார் மனுவில் கடந்த 28-10-2021ம் தேதியன்று கடன் கொடுத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் கடந்த 02-10-2021ம் தேதியன்று தான் கடன் பெற்றார். எதிரி சீட்டு தொகை எதுவும் கொடுக்காதபோது, எதிரிக்கு ரூ.5,00,000/-ம் கடன் கொடுத்தேன் என்று சொல்வது நம்பும்படி இல்லை என்றால் சரியல்ல. சீட்டு நிலுவை தொகை சம்பந்தமாக SRL பாடி பில்டிங் நிறுவனத்தில் பஞ்சாயத்து பேசப்பட்டதா என்றால் பேசப்பட்டது. அந்த சமயத்தில் எதிரி, ஜாதியை பற்றி கூறியதால் அந்த கோபத்தில் சீட்டு தொகைக்காக பிணையத்திற்காக கொடுக்கப்பட்ட காசோலையை மோசடியாக பயன்படுத்தி இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9) எதிரி கொடுத்த வெற்று காசோலையை மோசடியாக அதிகப்படியான தொகைக்கு பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் பணிபுரிந்த நிறுவனத்தில் பஞ்சாயத்து பேசியபோது நான் அங்கில்லை என்றால் சரிதான். எனது கணவர் கூறியதை கேட்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி ஜாதியை பற்றி பேசியிருந்தால் உடனே நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் அளித்திருப்போம் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு, சொன்ன தேதியில் எந்தவொரு தொகையும் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றும், எனது கணவர் கூறியதன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Ananthi